<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
<u>EA.No.1/2022 in EP.No.79/2021 in OS.No.67/1992</u>

18.03.2024 ம.சா.1 திரு. சிம்சன்

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தாயார் சேவியர் காலனி முகவரியல் தான் குடியிருந்து வருகிறார் என்றால்சரிதான். தாவா சொத்தின் அமைந்துள்ள கிராமத்தின் பெயர் வி.எம்.சத்திரம் என்றால்சரிதான். என் தாயாருக்கு வயோதிகம் மற்றும் உடல்நிலை சரியில்லை என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கில் என் தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தெரியாது. அசல் வழக்கில் என் தாயார் 2ம்பிரதிவாதி என்றால் தெரியாது. அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராது என்னிடம் காட்டப்படுவது என்றால் தெரியாது.
2. என் தாயார் தாக்கல் செய்த எதிர்வழக்குரை குறித்தும் தெரியாது என்றால்சரிதான். தாயாருக்கு எதிராக பரிகாரங்கள் எதுவும் வழக்கில் கோரப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தாயார் தாக்கல் செய்த மனு விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலத்திலுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் தற்போது நினைவில்லை. என் தாயார் எனக்கு பொது அதிகாரம் எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. பொது அதிகாரம் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. என் தாயார் தாக்கல் செய்த மனுவின் சொத்து விவரங்கள் தெரியுமா என்றால் சரியாக சொல்ல இயலாது. மனு பரிகாரம் என்னவென்றும் மனுவை பார்த்தால் தான் கூற இயலுமா என்றால் சரியாக சொல்ல தெரியாது. என் தாயார் சார்பாக சாட்சியம்